# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்

**நிலையறிபரீட்சை – 2021**

## குடியியற்கல்வி –I,II

| பெயர் ∴ சுட்டெண் :- ..................... | தரம் :- 10 | நேரம் :- 3 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி இடுக.

**மேலதிக வாசிப்பு நேரம் : 10 நிமிடங்கள்**
வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்திக்கொள்க.

## குடியியற்கல்வி -I

01. உலகில் கி.பி 1688இல் ஏற்பட்ட புரட்சியாக அமைவது

(1) அமெரிக்கப்புரட்சி (2) பிரான்சியப்புரட்சி (3) ஆங்கிலப்புரட்சி (4) ரஷ்யப்புரட்சி

02. இரு கட்சி முறையைப் பின்பற்றும் நாடுகளை மட்டும் கொண்டுள்ள விடையை தெரிவு செய்க.

(1) இலங்கை,பெரிய பிரித்தானியா (2) பெரிய பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா

(3) சீனா, இலங்கை (4) கியூபா, ஐக்கிய அமெரிக்கா

03. தமது அரசியல், பொருளாதார மற்றும் சமூகத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக தனிநபருக்கு சமூகத்தால் பெற்றுக்கொடுக்கப்படும் சந்தர்ப்பம்

(1) உரிமை (2) இறைமை (3) தேசியம் (4) சுதந்திரம்

04. எவ்வித உள்ளக மற்றும் வெளியக சக்திகளால் கட்டுப்படுத்த முடியாத மக்களுக்காகப் பிரயோகிக்கும் அதிஉயர் அதிகாரம்

(1) இறைமை (2) உரிமை (3) சுதந்திரம் (4) நல்லாட்சி

05. ஓர் இனத்தவருக்கு ஓர் அரசு என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட அரசு

(1) ஒற்றையாட்சி அரசு (2) கூட்டாட்சி அரசு (3) தேசிய அரசு (4) பிரதேச அரசு



kalvi.lk

06. பின்வருவனவற்றுள் சனநாயக வாழ்க்கை முறையின் பண்பொன்றாக **அமையாதது**

(1) சமத்துவம் பேணல்

(2) போட்டிக்கட்சி முறை

(3) உரிமைகளை அனுபவிப்பதோடு அதனுடனான கடமைகளை நிறைவேற்றல்.

(4) கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை நிறைவேற்றுதல்.

07. சட்டவாக்கம், நிறைவேற்றுத்துறை, நீதித்துறைகளை நடைமுறைப்படுத்தும் முக்கிய பொறுப்பு மத்திய அரசுக்கு மட்டும் உரித்தான ஆட்சி முறை

(1) ஒற்றையாட்சி (2) கூட்டாட்சி (3) சர்வாதிகார ஆட்சி (4) மன்னராட்சி

08. ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டமாக அமைவது

(1) குற்றவியல் சட்டம் (2) சிவில் சட்டம்

(3) அரசியலமைப்புச் சட்டம் (4) பொதுச்சட்டம்

09. பின்வருவனவற்றுள் ஐரோப்பாவில் ஆரம்பத்தில் தோற்றம் பெற்ற தேசிய அரசு எது?

(1) சுவீடன் (2) இத்தாலி (3) ஜேர்மனி (4) ஸ்பெயின்

10. பாராளுமன்ற அரசாங்கமுறையின் தாயகமாகக் கருதப்படும் நாடு

(1) கிரேக்கம் (2) இந்தியா (3) ஐக்கிய அமெரிக்கா (4) பிரித்தானியா

11. அரசின் அல்லது மக்களின் விருப்பங்களைக் கொள்கைகளாக மாற்றுவதன் மூலம் அவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரும் பிரதிநிதி அரசாங்கமாகும் எனக் கூறியவர்

(1) பேராசிரியர் காணர் (2) சீலர் (3) ஜீ.டி.எச்.கோல் (4) பேராசிரியர் ஹரலட் ஜே.லஸ்கி

12. சட்டத்துறையின் மூலம் உருவாக்கப்படும் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் நிறுவனம்

(1) நீதித்துறை (2) பாராளுமன்றம் (3) நிறைவேற்றுத்துறை (4) உள்ளூராட்சி மன்றம்

13. பின்வருவனவற்றுள் சட்டரீதியான கடமைகள் என்பதனுள் **உள்ளடங்காதது**

(1) அரசுக்குரிய வரியைச் செலுத்துதல். (2) நடைமுறையிலுள்ள சட்டங்களை மதித்தல்

(3) அரசியல் யாப்பினைப் பாதுகாத்தல். (4) பெரியோரை மதித்தல்.

14. இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசு யாப்பில் காணப்படும் மக்களின் கருத்துக்களை நேரடியாக அறியும் முறை எவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது

(1) பாராளுமன்றத் தேர்தல் (2) பொதுசன அபிப்பிராயத் தேர்தல்

(3) மாகாணசபைத்தேர்தல் (4) ஜனாதிபதித் தேர்தல்

15. பெரிய பிரித்தானியாவில் பெயரளவு நிர்வாகியாக விளங்குபவர்

(1) பிரித்தானியாவின் முடி (2) பிரதமர் (3) சபாநாயகர் (4) சனாதிபதி



kalvi.lk

16. இலங்கையில் மாகாண ஆளுநரை நியமிப்பவர்

(1) முதலமைச்சர் (2) பிரதமர் (3) சட்டமாஅதிபர் (4) சனாதிபதி

17. மத்திய அரசின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை அதிகாரங்கள் அரசியல் யாப்பின் மூலம் பிராந்திய ஆட்சி அலகுகளிடம் ஒப்படைத்தல்

(1) அதிகாரப் பன்முகப்படுத்தல் (2) அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல்

(3) அதிகார ஒன்று குவிப்பு (4) அதிகாரத்தை மையப்படுத்தல்

18. ஒரு மத்திய அதிகாரபீடம் மாத்திரம் சட்டமியற்றும் உயர் அதிகாரத்தைக் கொண்டிருப்பது ஒற்றையாட்சியின் அடிப்படைப் பண்பாகும் எனக் கூறியவர்

(1) கே.சி.வியர் (2) சீ.எப்.ஸ்ரோங் (3) ஏ.வீ.டைசி (4) ஜே.பைனர்

19 அரசு பற்றிய **தவறான** கூற்றாக அமைவது

(1) அரசு என்பது எப்போதும் ஒரே அரசாங்கத்தையே கொண்டிருக்கும்.

(2) அது ஒரு நிலையான நிறுவனமாகும்.

(3) நிலம், மக்கள்தொகை, அரசாங்கம், இறைமை என்னும் கூறுகளை உள்ளடக்கியது.

(4) தற்கால அரசுகள் தேசிய அரசுகளாகக் காணப்படுதல்.

**பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 20ஆம் வினாவிற்கு விடையளிக்குக.**

A - சட்டத்தை உருவாக்குதல் B - கட்டளைகள், ஆணைகள் பிறப்பித்தல்

C–அரசியலமைப்பைப் பாதுகாத்தல் D– சட்டத்திற்கு விளக்கமளித்தல்

E– நிதி நிர்வாகம் F - வெளிநாட்டு தொடர்புகளைக் கட்டுப்படுத்தல்

20. இவற்றுள் **சட்டத்துறையின்** அதிகாரங்களைக் குறித்து நிற்கும் எழுத்துக்களைக் கொண்ட விடைத்தொகுதி

(1) AD (2) BF (3) CD (4) AE

21. உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்றான நகரசபையின் தலைவராகக் கொள்ளப்படுபவர்

(1) தலைவர் (2) ஆளுநர் (3) முதலமைச்சர் (4) நகரபிதா

22. ஐக்கிய அமெரிக்காவில் சமஷ்டி ஆட்சிமுறையில் பிரதேச நிர்வாக அலகுகள் எவ்வாறு அழைக்கப்படும்

(1) மாவட்டம் (2) கென்ரன்கள் (3) மாநிலம் (4) மாகாணம்

23. இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் 1865இல் உருவாக்கப்பட்ட கட்டளைச்சட்டம எது?

(1) கிராமசபைக் கட்டளைச்சட்டம் (2) மாநகரசபைக் கட்டளைச்சட்டம்

(3) நகரசபைக் கட்டளைச்சட்டம் (4) பிரதேசசபைக் கட்டளைச்சட்டம்



kalvi.lk

24. சுவிட்சர்லாந்தின் கென்ரன்களுக்குரிய அதிகாரமாக அமைவது

(1) வெளிவிவகாரம் (2) வெளிநாட்டு ஒப்பந்தம்

(3) பாதுகாப்பு மற்றும் இராணுவ நடவடிக்கை (4) பெருந்தெருக்கள்

25. அதிகாரப்பன்முகப்படுத்தல் நடவடிக்கை மூலம் 1987இல் இலங்கையில் உருவாக்கப்பட்ட அமைப்பு

(1) மாநகரசபை (2) நகரசபை (3) மாகாணசபை (4) பிரதேசசபை

26. 1926இல் மலைநாட்டுப் பகுதிக்கு சமஷ்டி ஆட்சி முறையின் தேவை பற்றிக் கருத்துக் கூறியவர்

(1) ஜே.ஆர்.ஜெயவர்த்தன (2) டி.எஸ்.சேனநாயக்க

(3) S.W.R.D பண்டார நாயக்க (4) டட்லி சேனநாயக்க

27. தேசியசபை, அரசசபை என்னும் இரு மன்றங்களைக் கொண்ட சுவிட்சர்லாந்தின் சட்டத்துறைக்கு வழங்கப்படும் பெயர்

(1) பாராளுமன்றம் (2)சமஸ்டிப்பேரவை (3) காங்கிரஸ் (4) சமஷ்டி சபை

28. இறைமை என்பதனுள் **உள்ளடங்காதது**

(1) ஆட்சி அதிகாரம் (2) அடிப்படை உரிமைகள் (3) வாக்குரிமை (4) சுதந்திரம்

29. மாகாணசபையினால் இயற்றப்படும் சட்டம்

(1) நியதிச்சட்டம் (2) சர்வதேச சட்டம் (3) சமுத்திரச்சட்டம் (4) சுற்றாடற் சட்டம்

30. பொருளாதாரமுறையொன்றில் அதிகாரம் பெற்ற குழுவினரால் ஏனையோரை வழிநடத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியே அதிகாரமாகும் என வரைவிலக்கணப்படுத்தியவர்கள்

(1) சமூகவியல் நிபுணர்கள் (2) பொருளியல் நிபுணர்கள்

(3) அரசியல் நிபுணர்கள் (4) மெய்யியல் நிபுணர்கள்

31. "வழிபாடுகள், சிந்தனைமுறை, நடைமுறைக்கலைகள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் சமூகரீதியாகப் பின்பற்றுவது தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைகள் பண்பாடாகும்" எனக் கூறியவர்

(1) T.B.டெயிலர் (2) சாள்ஸ் A.எல்வூட் (3) சீலர் (4) உ.கூ.ஹீலர்

32. ஒரு நாடு சட்டத்தின் மேன்மைக்கு உட்பட்டு ஆட்சி செய்யப்படுமாயின் அந்த ஆட்சி எவ்வாறு அழைக்கப்படும்.

(1) கூட்டாட்சி (2) சர்வாதிகார ஆட்சி

(3) சட்டத்தின் ஆட்சி (4) சோஷலிச ஆட்சி

33. பன்மைப் பண்பாட்டுச்சமூகம் உருவாகுவதில் செல்வாக்குச் செலுத்தும் ஆக்கிரமிப்பு சார் காரணி

(1) சேனன் குத்திகனின் வருகை (2) பண்டுவாசுதேவன் வருகை

(3) சங்கமித்தை வருகை (4) மகிந்ததேரர் வருகை



kalvi.lk

34. பன்மைப் பண்பாட்டு கலாசார இயல்புகளைக் கொண்ட நாடுகளின் தொகுதி

(1) ஐக்கிய அமெரிக்கா, பாகிஸ்தான், இந்தியா
(2) பிரித்தானியா, ஆப்கானிஸ்தான், இந்தியா
(3) பிரித்தானியா, கனடா, இஸ்ரேல்
(4) ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, இலங்கை

35. நல்லாட்சி என்னும் எண்ணக்கரு உருவான காலப்பகுதி

(1) 1960களின் பின்னர் (2) 1980களின் பின்னர்

(3) 1970களின் பின்னர் (4) 1990களின் பின்னர்

36.பின்வருவனவற்றுள் பண்பாட்டின் கூறுகளுள் **அடங்காதது** எது?

(1)போதைப் பொருட்கள் (2) கலைகள் (3)விதி முறைகள் (4)நம்பிக்கைகள்

37. அநேக அபிவிருத்தியடைந்த நாடுகளின் இலக்காக அமைந்துள்ளது

(1) வேற்றுமைகளுக்கு மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்துதல்.
(2) ஒற்றுமைகளுக்கு மத்தியில் வேற்றுமையை ஏற்படுத்துதல்.
(3) வேற்றுமைக்கு மத்தியில் வேற்றுமையை அதிகரித்தல்.
(4) ஒற்றுமைக்கு மத்தியில் ஒற்றுமையை அதிகரித்தல்.

38. இலங்கையின் சனத்தொகைக் கட்டமைப்பில் சிங்கள மக்கள் தவிர்த்து ஏனைய மக்களின் சதவீதம்

(1) 26.1% (2) 27.2%; (3) 24.1%; (4) 25.1%

39. பின்வருவனவற்றுள் ஊடாக சுதந்திரத்தைப் பாதுகாக்கும் ஆட்சிமுறை

(1) மன்னராட்சி (2) சர்வாதிகாரஆட்சி (3) நல்லாட்சி (4) குழுவாட்சி

40. பின்வருவனவற்றுள் சுவிட்சர்லாந்தின் அரசகரும மொழியினுள் **அடங்காத** மொழி எது?

(1) ஜேர்மன் மொழி (2) பிரான்சிய மொழி

(3) இத்தாலிய மொழி (4) கிரேக்க மொழி

Education கல்வி



kalvi.lk

## குடியியற்கல்வி -II

- **முதலாம்** வினா கட்டாயமானது.
- **முதலாம்** வினாவிற்கும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.

01. (I)சனநாயகம் பற்றிய வரைவிலக்கணங்களை முன்வைத்த பிரபல நபர்கள் **இருவரைப்** பெயரிடுக.

(II) எதென்ஸ் நகர அரசில் பிரதான ஆட்சி நிறுவனமாக விளங்கிய மக்கள் மன்றத்தின் செயற்பாடுகளில் பங்குகொள்ள அனுமதிக்கப்படாத **இரண்டு** பிரிவினரைப் பெயரிடுக.

(III) சனநாயக நாட்டில் தேர்தல் தொகுதிகள் மூலம் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதனால் ஏற்படும் அனுகூலங்கள் **இரண்டு** தருக.

(IV) சமஷ்டி அரசாங்கத்தில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள நிறுவனங்கள் **இரண்டையும்** எழுதுக.

(V) சுவிட்சர்லாந்தின் பிராந்திய அலகுகளுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(VI)சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலின் பண்புகள் **இரண்டு** தருக.

(VII) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(VIII) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் நன்மைக்காக பிரசை ஒருவர் விருத்தி செய்து கொள்ள வேண்டிய பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(IX) ஐக்கிய அமெரிக்காவில் மத்திய அரசுக்குரிய அதிகாரங்கள் **இரண்டு** தருக.

(X) பாராளுமன்ற அரசாங்க முறையின் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(10 X 2 = 20 புள்ளிகள்)

02. (I) சனநாயகம் என்பதில் இடம்பெறும் “சன”,“நாயகம்” என்ற **இரு** பதங்களும் குறிக்கும் கருத்துக்களை **முறையே** எழுதுக. (2 புள்ளிகள்)

(II) தற்காலத்தில் நேரடி ஜனநாயகம் நிலவாமைக்கான காரணங்கள் **மூன்றினைத்** தருக? (3 புள்ளிகள்)

(III)(A) சனநாயக நாடொன்றில் காணப்படும் கட்சி முறைகளின் வகைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) மேலே கூறப்பட்ட கட்சி வகைகளுள் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)

03. (I) தேர்தல் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டு மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் நிறுவனங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) தேசிய அரசின் தோற்றத்திற்குக் காரணமான சிந்தனைகளை வழங்கிய அரசியல் சிந்தனையாளர்கள் **மூவரைத்** தருக. (3 புள்ளிகள்)

(III) (A) சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு அவசியமான காரணிகள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) மேலே கூறப்பட்ட காரணிகளுள் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)



kalvi.lk

04. (I)ஒற்றையாட்சி முறையினைப் பின்பற்றும் நாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) ஒற்றையாட்சி முறையின் அனுகூலங்கள் **மூன்றினைத்** தருக. (3 புள்ளிகள்)

(III) ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் யாப்பின் கட்டமைப்பின் இயல்புகளை **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றுள் **ஒன்றினை** விளக்குக. (3 புள்ளிகள்)

05 (I) மாகாணசபையொன்றின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கும் **இரு** விடயங்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(II) மாகாணசபை ஒன்றின் ஆளுநரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(III) (A) இலங்கையில் 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 13வது சட்டத்திருத்தத்தின்படி அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள **மூன்று** பட்டியல்களையும் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) அவற்றுள் ஒரு பட்டியலில் குறிப்பிடப்படும் அதிகாரங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

06 (I) அரசானது மக்கள் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய பொறுப்புக்கள் **இரண்டு** தருக. (2 புள்ளிகள்)

(II)சனநாயகப் பிரசைகளிடம் காணப்பட வேண்டிய பண்புகள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

(III) (A) சனநாயக ஆட்சி முறையின் முக்கியத்துவங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக.(3 புள்ளிகள்)

(B) மேற்கூறிய முக்கியத்துவங்களுள் **ஒன்றினை** விளக்குக. (2 புள்ளிகள்)

07 (I) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தை தனது நாட்டின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்ட நாடுகள் **இரண்டைத்** தருக. (2 புள்ளிகள்)

(II) நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக? (3 புள்ளிகள்)

(III (A') நல்லாட்சி தொடர்பாக ஒவ்வொருவருக்கும் மதிப்பளிக்க வேண்டிய பெறுமானங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(B) மேலே கூறப்பட்டவற்றுள் **ஒரு** பெறுமானத்தினை விளக்குக . (2 புள்ளிகள்)



kalvi.lk

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடாக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page